DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. - 151/2024

Prosecution PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. பாஸ்கர் | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 04.02.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A10 Present.

<u>முதல் விசாரணை</u>

நான் காட்டுகுறிச்சியில்குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அசா 1 என் அண்ணன். அசா 5 என் அக்கா. அசா 2 என் தம்பி, அசா 3 என் அண்ணி, அசா 4 என் சின்னம்மா. இறந்துபோன ஜெயகுமார் என் மாமா. ஆஜர் எதிரிகளை தெரியாது. 01.04.2024ம் தேதி பசுபதிகோவிலுக்கு என் மகள் பிறந்தநாளுக்கு என் சின்னம்மா, சித்தப்பா, ஆகியோர்களை அழைக்க காரில் சென்றேன். என் சித்தப்பா, அக்கா, பிரவீன்குமார் ஆகியோர்களை என் காரில் அழைத்து வந்தேன். செந்தில்குமார், ஜெயகுமார், சுமலதா ஆகியோர் வேறு ஒரு காரில் வந்தார்கள். பசுபதி கோவிலிருந்து காட்டுகுறிச்சி வருவதற்காக வந்தோம். அப்போது பசுபதி கோவில் மெயின் ரோட்டில் கூட்டமாக இருந்தது. அங்கு பிரச்சனை செய்து கொண்டிருந்தார்கள். நாங்கள் காருக்கு வழி விட ஆரன் அடித்தோம். ஏன்டா ஆரன் அடிக்கிறாய் என்று எங்கள் காரை அடித்தார்கள். முதல் காரில் சென்ற ஜெயகுமாருக்கு அடிப்பட்டது. யார் அடித்தது என்று தெரியாது. என்னையும் வலது தோள் பட்டையில் அடித்து விட்டார்கள். யார் அடித்து என்று தெரியாது. காயம் பட்ட ஜெயகுமாருக்கு மயக்கம் வந்தது. அவரை தஞ்சாவூருக்கு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் அங்கு பரிசோதித்துவிட்டு இறந்துவிட்டார் என்று சொன்னார்கள். அசா1, 2க்கும் காயம் ஏற்பட்டது. அசா 4 க்கு வாயில் அடிப்பட்டது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலிசார் விசாரணையில், கடந்த ஊராட்சி மன்ற தேர்தலில் அசா3 துணை தலைவருக்கு போட்டியிட்டு வெற்றி பெற்றார் என்றும், எங்கள் ஊரை சேர்ந்த பாபு என்பவர் தோற்றதால் என் அண்ணன் மீது பாபு உறவினர் கோபத்தில் இருந்து வந்தார்கள் என்றும் பாபு உறவினர் அழகேசன் என்பவரின் அக்கா மகள் சாந்தியை என் அண்ணன் மூலம் தில்லைஸ்தானம் மடத்தில் வேலைக்கு சேர்த்துவிட்டார்கள் என்றும் அசா 3 தேர்தலில் வெற்றி பெற்றதும் சாந்தியை வேலைக்கு சேர்த்தலிருந்தும் என் அண்ணன்

அசா1ற்கும், சாந்திக்கும் தவறான தொடர்பு இருப்பதாக அழகேசன் அசா1டம் அடிக்கடி குடி போதையில் பிரச்சனை செய்தார் என்றும் 31.03.2024ம் தேதி அசா1ம் என் அண்ணனின் குடும்பத்தாரும், தஞ்சாவூரில் வீட்டில் இருந்தபோது அசா1ன் வீட்டில் இருந்த கேமிராவை யாரோ உடைத்துவிட்டார்கள் என்று புகார் கொடுக்க என் அத்தை மகனான இறந்துபோன ஜெயகுமாருக்கு சொந்தமான காரில் நானும் என் அண்ணன், அண்ணி ஆகியோரும் மற்றொரு காரில் ரமேஷ், ஜெயகுமார்ஆகியோரரும் மற்றொரு காரிலும், பிரவீன்குமார், நானும் சுரேஷ், ராஜேஸ்வரி ஆகியோர் சுரேஷ் காரிலும் 1.04.2024ம்தேதி மாலை 5.00 மணிக்கு பசுபதி கோவில் மெயின் ரோட்டில் உள்ள VAO அலுவலகம் வந்தபோது காளியம்மன் கோவிலை சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி மகன் விஜயேந்திரன் இருசக்கர வாகனம் ஓட்ட அவரது பின்னால் அழகேசன் அமர்ந்திருக்க நாங்கள் வந்த காரை வழிமறைத்து மறித்து நிறுத்தி இருவரும் ரோட்டில் ஓரத்தில் இருந்த மூங்கில் கம்பை எடுத்து கார் கண்ணாடியை உடைத்தார்கள் என்றும அப்போது அங்கிருந்த கார்த்திக், சதாசிவம், சந்தோஷ்குமார், சரண்ராஜ், முத்து என்கிற முத்துராஜ் ஆகியோர்கள் ஆளுக்கொரு கட்டையை எடுத்துகொண்டு அழகேசன் மற்றும் விஜயேந்திரனுடன் சேர்ந்தது கார் கண்ணாடிய அடித்து உடைததார்கள் என்றும் அழகேசன் என் அண்ணனை பார்த்து தகாத வார்த்தையால் போலிசுக்கா போற என்று திட்டி கொண்டே உன்னை கொல்லாமல் விடகூடாது என்று அடித்து கொல்லுங்கடா என்று சொல்லி அழகேசன், கார்த்திக், சந்தோஷ்குமார், சரண்ராஜ், சதாசிவம்,முத்துராஜ், விஜயேந்திரன், மனோகரன், ராஜ்வ்காந்தி ஆகியோர் காரில் இருந்த என் அண்ணனின் வலது கையிலும் முதுகிலும் அடித்து வெளியே இழுக்க முயற்சித்தார்கள் என்றும் இதனை பார்த்த பிரவீன்குமார், சுரேஷ், நானும் ஜெயகுமார், ராஜேஸ்வரி, என் அம்மாவையும், மற்றும் பிரவீன்குமாரும் தடுக்க வந்தபோதும் ஜெயகுமாரை அழகேசன் கட்டையால் மண்டையில் அடித்தும் , கார்த்திக் கட்டையால் நெத்தியில் அடித்து இழுத்து சென்றார் என்றும் சந்தோஷ்குமார் மற்றும் சரண்ராஜ் பிடித்துகொள்ள முத்து என்கிற முத்து ராஜ், அழகேசன், கார்த்திக் ஆகியோர் ஜெயகுமாரை கன்னத்தில் மாறி மாறி அடித்து தடுக்கவா வர என்று சொல்லி மாறி மாறி அடித்தார்கள் என்றும் என் அண்ணனை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறினார்கள் என்றும் அதை தடுக்க வந்த பிரவீன்குமாரை முத்து என்கிற முத்துராஜ், சரண்ராஜ், சந்தோஷ்குமார் ஆகியோர் இழுத்து சென்று அவர்களது முகத்திலும், தலையிலும் அடித்ததும் கீழே விழுந்துவிட்டார்கள் என்றும் ஜெயகுமாரை அழகேசன், கார்த்திக், சந்தோஷ்குமார், சரண்ராஜ், முத்து என்கிற முத்துராஜ் ஆகியோர் கையாலும் கட்டையாலும் மாறி மாறி அடித்து கீழே விழுந்தவரை முகத்திலும் கழுத்திலும் காலால் உதைத்தார்கள் என்றும் ஜெயகுமார் மயக்க நிலையில் இருந்தார் என்றும், அழகேசன், விஜயேந்திரன், கார்த்திக், சந்தோஷ்குமார், சரண்ராஜ், முத்துராஜ், சதாசிவம் ஆகியோர் என் அண்ணனை அடித்து காரில் இருந்து அடித்து வெளியே இழுத்தபோது என்னையும், என் அம்மா தமிழரசி, என் அண்ணி, தடுத்தபோது அழகேசன் மற்றும் முத்து என்கிற முத்துராஜ் ஆகியோர் அவர்களது கன்னத்தில் அடித்தார்கள் என்றும், என்னையும், சந்தோஷ்குமார் மற்றும் சரண்ராஜ் இருவரும் கையால் கன்னத்தில் அறைந்தும், வயிற்றில் குத்தினார்கள் என்றும், சுரேஷை கார்த்திக் மற்றும் விஜயேந்திரனை கையால் மாறி மாறி கையால் அடித்தார்கள் என்றும் சதாசிவம், முத்து என்கிற முத்துராஜ், சந்தோஷ்குமார், கார்த்திக் ஆகியோர்

மீண்டும் என் அண்ணனை காரிலிருந்து வெளியே எடுக்க முயற்சித்தார்கள் என்றும் அப்போது கையில் கம்புடன் வந்த கென்னடி என்பவர் என் அண்ணனை கொல்லாமல் விடமாட்டேன் என்று பிரவீன்குமாரை அடிக்க வர அங்கிருந்தவர்கள் தடுத்தார்கள் என்றும் அழகேசன் அண்ணன் ராஜ்வ் காந்தி கென்னடி அண்ணன் மனோகரன், ஆகியோர் நின்றுகொண்டிருந்தார்கள் என்றும் பொதுமக்கள் அனைவரும் ஒன்று கூடியிருந்த காவல் துறையினர் வருவதை கண்டு அங்கிருந்து தப்பி சென்றார்கள் என்றும், நான் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலம் ஜெயகுமார் மற்றும் பிரவீன்குமாரையும் அனுப்பி வைத்தேன் என்றும் மற்றொரு 108 ஆம்புலன்சில் என் அம்மாவும், என் அண்ணன் என் அண்ணி தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சை கொண்டு வந்து என் அண்ணனை மட்டும் சேர்த்தார்கள் என்றும் என் அம்மாவிற்கும், என் அண்ணிக்கும் லேசான காயம் என்பதால் உள்நோயாளியாக சிகிச்சை சேரவில்லை என்றும் காயம் பட்ட ஜெயகுமார் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக எதிரிகளை காப்பாற்ற பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

இல்லை

ஒம்/ஜி.சுந்தரராஜன்,
அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. - 151/2024

Prosecution PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. துரைராஜன் | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 04.02.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A10 Present.

முதல் விசாரணை

நான் பசுபதி கோவிலில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அசா 1 என் மகன். அசா 5 என் மகள். அசா 2 என் தம்பி மகன், அசா 3 என் மருமகள், அசா 4 என் மனைவி. அசா 6 என் அண்ணன் மகன். இறந்துபோன ஜெயகுமார் என் தங்கச்சி மகன். ஆஜர் எதிரிகளை தெரியும். 01.04.2024ம் தேதி பசுபதிகோவிலிருந்து தஞ்சாவூருக்கு காரில் என் மகன், மனைவி, மருமகள், மற்றும் நான் இறந்துபோன ஜெயகுமாரும் காரில் வந்தோம். அசா 2, பிரவீன்குமார், என் மகள் ராஜகுமாரி, பாஸ்கர் வேறு ஒரு காரில் புறப்பட்டு வந்தோம். அப்போது பசுபதி கோவில் மெயின் ரோட்டில் கூட்டமாக இருந்தது. அங்கு பிரச்சனை செய்து கொண்டிருந்தார்கள். நாங்கள் காருக்கு வழி விட ஆரன் அடித்தோம். ஏன்டா ஆரன் அடிக்கிறாய் என்று எங்கள் காரை அடித்தார்கள். காரை அடித்ததும் எனக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது. என் மனைவிக்கு வாயில் அடிப்பட்டது. அசா 2க்கு தலையில் அடிப்பட்டது. என் மகனுக்கு வலது கை உடம்பில் அடிப்பட்டது. ஜெயகுமாருக்கு அடிப்பட்டது. யார் அடித்தது என்று தெரியாது. காயம் பட்ட ஜெயகுமாருக்கு மயக்கம் வந்தது. அவரை தஞ்சாவூருக்கு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் அங்கு பரிசோதித்துவிட்டு இறந்துவிட்டார் என்று சொன்னார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. கையெழுத்து மட்டும் வாங்கினார்கள்.

(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலிசார் விசாரணையில், கடந்த ஊராட்சி மன்ற தேர்தலில் அசா3 துணை தலைவருக்கு போட்டியிட்டு வெற்றி பெற்றார் என்றும், எங்கள் ஊரை சேர்ந்த பாபு என்பவர் தோற்றதால் என் மகன் மீது பாபு உறவினர் கோபத்தில் இருந்து வந்தார்கள் என்றும் பாபு உறவினர் அழகேசன் என்பவரின் அக்கா மகள் சாந்தியை என் மகன் மூலம் தில்லைஸ்தானம் மடத்தில் வேலைக்கு சேர்த்துவிட்டார்கள் என்றும் அசா 3 தேர்தலில் வெற்றி பெற்றதும் சாந்தியை வேலைக்கு சேர்த்தலிருந்தும் என் மகன் அசா1ற்கும்,

சாந்திக்கும் தவறான தொடர்பு இருப்பதாக அழகேசன் அசா1 டம் அடிக்கடி குடி போதையில் பிரச்சனை செய்தார் என்றும் 31.03.2024ம் தேதி அசா1ம் எங்கள் குடும்பத்தாரும், தஞ்சாவூரில் வீட்டில் இருந்தபோது அசா1ன் வீட்டில் இருந்த கேமிராவை யாரோ உடைத்துவிட்டார்கள் என்று புகார் கொடுக்க என் அத்தை மகனான இறந்துபோன ஜெயகுமாருக்கு சொந்தமான காரில் நானும் என் மகன், மருமகள் ஆகியோரும் மற்றொரு காரில் ரமேஷ், ஜெயகுமார்ஆகியோரரும் மற்றொரு காரிலும், பிரவீன்குமார், பாஸ்கர், சுரேஷ், ராஜேஸ்வரி ஆகியோர் சுரேஷ் காரிலும் 1.04.2024ம்தேதி மாலை 5.00 மணிக்கு பசுபதி கோவில் மெயின் ரோட்டில் உள்ள VAO அலுவலகம் வந்தபோது காளியம்மன் கோவிலை சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி மகன் விஜயேந்திரன் இருசக்கர வாகனம் ஓட்ட அவரது பின்னால் அழகேசன் அமர்ந்திருக்க நாங்கள் வந்த காரை வழிமறைத்து மறித்து நிறுத்தி இருவரும் ரோட்டில் ஓரத்தில் இருந்த மூங்கில் கம்பை எடுத்து கார் கண்ணாடியை உடைத்தார்கள் என்றும அப்போது அங்கிருந்த கார்த்திக், சதாசிவம், சந்தோஷ்குமார், சரண்ராஜ், முத்து என்கிற முத்துராஜ் ஆகியோர்கள் ஆளுக்கொரு கட்டையை எடுத்துகொண்டு அழகேசன் மற்றும் விஜயேந்திரனுடன் சேர்ந்தது கார் கண்ணாடிய அடித்து உடைததார்கள் என்றும் அழகேசன் என் மகனை பார்த்து தகாத வார்த்தையால் போலிசுக்கா போற என்று திட்டி கொண்டே உன்னை கொல்லாமல் விடகூடாது என்று அடித்து கொல்லுங்கடா என்று சொல்லி அழகேசன், கார்த்திக், சந்தோஷ்குமார், சரண்ராஜ், சதாசிவம்,முத்துராஜ், விஜயேந்திரன், மனோகரன், ராஜ்வ்காந்தி ஆகியோர் காரில் இருந்த என் மகனின் வலது கையிலும் முதுகிலும் அடித்து வெளியே இழுக்க முயற்சித்தார்கள் என்றும் இதனை பார்த்த பிரவீன்குமார், சுரேஷ், பாஸ்கர், ஜெயகுமார், ராஜேஸ்வரி, என் மனைவி, மற்றும் பிரவீன்குமாரும் தடுக்க வந்தபோதும் ஜெயகுமாரை அழகேசன் கட்டையால் மண்டையில் அடித்தும் , கார்த்திக் கட்டையால் நெத்தியில் அடித்து இழுத்து சென்றார் என்றும் சந்தோஷ்குமார் மற்றும் சரண்ராஜ் பிடித்துகொள்ள முத்து என்கிற முத்து ராஜ், அழகேசன், கார்த்திக் ஆகியோர் ஜெயகுமாரை கன்னத்தில் மாறி மாறி அடித்து தடுக்கவா வர என்று சொல்லி மாறி மாறி அடித்தார்கள் என்றும் என் மகனை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறினார்கள் என்றும் அதை தடுக்க வந்த பிரவீன்குமாரை முத்து என்கிற முத்துராஜ், சரண்ராஜ், சந்தோஷ்குமார் ஆகியோர் இழுத்து சென்று அவர்களது முகத்திலும், தலையிலும் அடித்ததும் கீழே விழுந்துவிட்டார்கள் என்றும் ஜெயகுமாரை அழகேசன், கார்த்திக், சந்தோஷ்குமார், சரண்ராஜ், முத்து என்கிற முத்துராஜ் ஆகியோர் கையாலும் கட்டையாலும் மாறி மாறி அடித்து கீழே விழுந்தவரை முகத்திலும் கழுத்திலும் காலால் உதைத்தார்கள் என்றும் ஜெயகுமார் மயக்க நிலையில் இருந்தார் என்றும், அழகேசன், விஜயேந்திரன், கார்த்திக், சந்தோஷ்குமார், சரண்ராஜ், முத்துராஜ், சதாசிவம் ஆகியோர் என் மகனை அடித்து காரில் இருந்து அடித்து வெளியே இழுத்தபோது பாஸ்கரையும், என் மனைவி தமிழரசி, என் மருமகள், தடுத்தபோது அழகேசன் மற்றும் முத்து என்கிற முத்துராஜ் ஆகியோர் அவர்களது கன்னத்தில் அடித்தார்கள் என்றும், பாஸ்கர், சந்தோஷ்குமார் மற்றும் சரண்ராஜ் இருவரும் கையால் கன்னத்தில் அறைந்தும், வயிற்றில் குத்தினார்கள் என்றும், சுரேஷை கார்த்திக் மற்றும் விஜயேந்திரனை கையால் மாறி மாறி கையால் அடித்தார்கள் என்றும் சதாசிவம், முத்து என்கிற முத்துராஜ், சந்தோஷ்குமார், கார்த்திக் ஆகியோர் மீண்டும் என் மகனை காரிலிருந்து வெளியே எடுக்க முயற்சித்தார்கள் என்றும் அப்போது

கையில் கம்புடன் வந்த கென்னடி என்பவர் என் மகனை கொல்லாமல் விடமாட்டேன் என்று பிரவீன்குமாரை அடிக்க வர அங்கிருந்தவர்கள் தடுத்தார்கள் என்றும் அழகேசன் அண்ணன் ராஜ்வ் காந்தி கென்னடி அண்ணன் மனோகரன், ஆகியோர் நின்றுகொண்டிருந்தார்கள் என்றும் பொதுமக்கள் அனைவரும் ஒன்று கூடியிருந்த காவல் துறையினர் வருவதை கண்டு அங்கிருந்து தப்பி சென்றார்கள் என்றும், பாஸ்கர் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலம் ஜெயகுமார் மற்றும் பிரவீன்குமாரையும் அனுப்பி வைத்தேன் என்றும் மற்றொரு 108 ஆம்புலன்சில் என் மனைவியும், என் மகன் என் மருமகள் தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சை கொண்டு வந்து என் மகனை மட்டும் சேர்த்தார்கள் என்றும் என்மனைவிக்கம் என் மருமகளுக்கும் லேசான காயம் என்பதால் உள்நோயாளியாக சிகிச்சை சேரவில்லை என்றும் காயம் பட்ட ஜெயகுமார் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக எதிரிகளை காப்பாற்ற பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

இல்லை

ஒம்/ஜி.சுந்தரராஜன்,

அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. - 151/2024

Prosecution PW - 8

| | | |
|---|---|---|
| Name | திரு. ரமேஷ் | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 04.02.2025 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A10 Present.

முதல் விசாரணை

நான் தஞ்சாவூர் மானோஜிபட்டியில் குடியிருந்து தஞ்சாவூர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகதொழில் செய்து வருகிறேன். இறந்துபோன ஜெயகுமாரை தெரியும். அசா 1 முதல் 6 ஐ தெரியும். 01.04.2024ம் தேதி தஞ்சாவூர் வழக்கறிஞர் சரவணன் என்பவர் ஒரத்தநாடு ஆழிவாய்க்காரை சேர்ந்த ஜெயகுமார் என்பவர் புகார் கொடுக்க வேண்டும் அவருக்கு உதவியாக இருங்கள் என்று போன் மூலம் சரவணன் சொன்னார். காலை 10.00 மணிக்கு இறந்துபோன ஜெயகுமார் மற்றும் அசா1ம் குடும்பத்தாரும் என்னை பார்க்க தஞ்சாவூர் நீதிமன்றத்திற்கு வந்தார்கள். அசா1ன் அப்பா வீட்டை சுமார் 10 நபர்கள் அடித்து உடைத்துவிட்டார்கள். சிசிடிவி கேமிராவையும் உடைத்துவிட்டார்கள். இது சம்பந்தமாக போலிசில் புகார் கொடுத்தோம். போலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை. அடுத்து என்ன செய்யவேண்டுமென்று கேட்டார்கள். நான் காவல் கண்காணிப்பாளரிடம்புகார் கொடுக்க சொன்னேன். பிறகு நானும், இறந்துபோன ஜெயகுமார், அசா 1 ஆகியோர் காவல் கண்காணிப்பாளர்அலுவலகம் சென்று புகார் கொடுத்தோம். புகார் கொடுத்துவிட்டு வெளியே வந்து அசா1, அய்யம்பேட்டை காவல் ஆய்வாளருக்கு போன் செய்தார். அவர் காவல்நிலையத்தில் இருப்பதாகவும் அங்கு வந்து புகார் கொடுங்கள் என்று சொன்னார். நாங்கள் அய்யம்பேட்டை காவல்நிலையம் சென்றோம். அங்கு ஆய்வாளர்நிலையத்தில் இல்லை. போன் செய்து கேட்டபோது மாலை வருமாறு சொன்னார். மீண்டும் காவல்நிலையத்திற்கு மாலை 5.00 மணிக்கு சென்றோம். இரண்டு கார்களில் காவல்நிலையம் செல்ல சென்றோம். என் காரில் நானும், மற்றொரு வழக்கறிஞர் சுதாகர், ஓட்டுனர், இறந்துபோன ஜெயகுமார் ஆகியோர் முன்னால் சென்றோம். பின்னால் காரில் அசா1ம் அவரது குடும்பத்தாரும் வந்தார்கள். பின்னால் வந்த காரில் மோதும் சத்தம் கேட்டது. திரும்பி பார்க்க 1வது எதிரி அழகேசன் இருசக்கர வாகனத்திலும், அவருடன் இன்னொரு நபரும், இருசக்கர வாகனத்தால் மோதி நகர விடாமல் தடுத்துவிட்டார்கள். பின்னர் இருசக்கர வாகனத்தில் இறங்கி கட்டை, கம்பி, ஆகியவற்றால் அடித்து உடைத்தார்கள். பின்னர் மீதமுள்ள 8 எதிரிகள் வந்து காரில் இருந்த அசா 1 செந்தில்குமார், அவரது மனைவி, அவரது அப்பா, அம்மா,

ஆகியோர்கள் மற்றும் அவரது குடும்பத்தாரை அடிக்க ஆரம்பித்தார்கள். இறந்துபோன ஜெயகுமார் எங்கள் காரிலிருந்து இறங்கி தடுக்க போனார். நீ யாருடா தடுக்க வர என்று சொல்லி அவரை கட்டையால் உடம்பு, தலை ஆகிய இடங்கில் 1 முதல் 10 எதிரிகள் அடித்தார்கள். அதனால் ஜெயகுமார் மயங்கி கீழே விழுந்துவிட்டார். நானும் தடுக்க முயற்சித்தேன். போனில் சம்பவத்தை பதிவு செய்தேன். என் போனில் பதிவு செய்த வீடியோவை காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன். நடந்த சம்பவத்தை என்னுடைய விவோ மொபைல் போனில் வீடியோவாக எடுத்து அதை அய்யம்பேட்டை காவல் ஆய்வாளர் அவரின் மொபைல் எண்ணுக்கு வாட்ஸ் ஆப் மூலம் அனுப்பினேன். பின்னர் 108 ஆம்புலன்சிற்கு நான் போன் செய்தேன். பின்னர் 108 ஆம்புலன்ஸ் வந்தது. காவல்நிலையத்திற்கும் போன் செய்தேன். மொபைல் யாரும் எடுக்கவில்லை. இரண்டு போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். போலிசாராலும் சம்பவத்தை தடுக்க முடியவில்லை. அதையும் வீடியோவில் பதிவு செய்தேன். பிறகு கூடுதலாக போலிசாரும் வந்து சம்பவத்தை தடுத்து நிறுத்தினார்கள். பிறகு அடிப்பட்ட நபர்களை 108 ஆம்புலன்சில் ஏற்றிவிட்டு சென்றார்கள். நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன் அப்போது ஜெயகுமார் இறந்துவிட்டது தெரிய வந்தது. என்னை போலிசார்விசாரித்தார்கள். பிறகு 23.04.2024ம் தேதி தஞ்சாவூர் நீதிதுறை நடுவர் எண் 3 நீதிமன்றத்தில் அழைப்பாணை பேரில் அங்கு நான் வாக்குமூலம் கொடுத்தேன். காட்டப்படும் குவிமுச பிரிவு 164(5)ன் கீழான வாக்குமூலம் நான் கொடுத்தது தான் அந்த வாக்குமூலம் அதசாஆ **4**. நான் எனது மொபைல் போனில் பதிவு செய்த வீடியோ தற்போதும் செல்போனில் உள்ளது. அந்த செல்போனை வீட்டில் வைத்துள்ளேன். அந்த செல்போனை ஆஜர் செய்ய வழக்கு 05.02.2025ம் தேதி ஒத்திவைக்கப்பட்டது.

ஒம்/ஜி.சுந்தரராஜன்,

அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்